# அத்தியாயம் 9
# விவசாய நாட்டின் பொருளாதாரத்தினை கைத்தொழில் நாட்டின் பொருளாதாரத்துடன் ஒப்பிடுதல்

இயற்கை வளங்களின் பயன்பாடு, மொத்த தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு, தேசிய உற்பத்திக்கு கிடைக்கக்கூடிய பங்களிப்பு, வேலைவாய்ப்பு, ஏற்றுமதி வர்த்தகத்திற்கான பங்களிப்பு, தொழில்நுட்பம் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகளை விவசாயப் பொருளாதார முறை, கைத்தொழில் பொருளாதார முறை என வகைப்படுத்தலாம். அதன்படி விவசாய பொருளாதார நாடுகளிலும் கைத்தொழில் பொருளாதார நாடுகளிலும் பொதுவாகக் காணக்கூடிய இயல்புகளை கீழ்வரும் அட்டவணை மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை 9.1 விவசாய, கைத்தொழில் பொருளாதார நாடுகளின் இயல்புகள்

| விவசாய நாடொன்றின் பொருளாதார இயல்புகள் | கைத்தொழில் நாடொன்றின் பொருளாதார இயல்புகள் |
|---|---|
| ❒ மொத்த தேசிய உற்பத்திக்கு விவசாய துறையின் பங்களிப்பு அதிகம். | ❒ மொத்த தேசிய உற்பத்தியில் கைத்தொழிலின் பங்களிப்பு அதிகம். |
| ❒ தலா மொத்தத் தேசிய உற்பத்தி தாழ்ந்த நிலையில் உள்ளது. | ❒ தலா மொத்தத் தேசிய உற்பத்தியானது. உயரந்த நிலையில் உள்ளது. |
| ❒ மூலதன வளம் குறைவு. | ❒ மூலதன வளத்தின் அளவு உயர்வானது. |
| ❒ தொழில்நுட்ப அறிவு குறைந்த மட்டத்தில் காணப்படல். | ❒ தொழில்நுட்ப அறிவு உயர் மட்டத்தில் காணப்படல். |
| ❒ சனத்தொகை வளர்ச்சி வேகம் அதிகம். | ❒ சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைவு. |
| ❒ கிராமிய சனத்தொகை அதிகம். | ❒ நகர சனத்தொகை அதிகம். |
| ❒ சந்தை வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல். | ❒ சந்தை வாய்ப்பு பரந்துள்ளது. |
| ❒ கல்வி குறைந்த மட்டத்திலேயே உள்ளது. | ❒ கல்வி உயர் மட்டத்தில் உள்ளது. |
| ❒ சேமிப்பும் முதலீடும் குறைந்த மட்டடத்தில் காணப்படல். | ❒ சேமிப்பும் முதலீடும் உயர் மட்டத்தில் காணப்படல். |

இதனடிப்படையில் ஐக்கியஅமெரிக்க அரசுகள், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சுவீடன், நோர்வே, யப்பான் ஆகிய நாடுகள் கைத்தொழில் பொருளாதாரமுறை நாடுகளுக்குள்ளும் இந்தியா, நேபாளம், இலங்கை, மியன்மார், பூட்டான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் விவசாய பொருளாதார நாடுகளுக்குள்ளும் உள்ளடங்குகின்றன.

விவசாயம், கைத்தொழில் ஆகிய பொருளாதார முறையில் காணக்கூடிய மேற்கூறிய வேறுபாடுகளை அவ்வாறான இருநாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நன்றாக உணர்ந்து கொள்ள முடியும். இதற்கான இரு உதாரணங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.



**செயற்பாடு 1**

- உலகப் புறவுருவப்படமொன்றில் கைத்தொழில் நாடுகள் ஐந்தினையும், விவசாய நாடுகள் ஐந்தினையும் குறித்துப் பெயரிடுக.
- விவசாயப் பொருளாதார நாடொன்றில் காணப்படும் முக்கிய பண்புகள் ஐந்தினை எழுதுக.

## ஆர்ஜன்டீனாவுடன் (விவசாய நாடு) ஜேர்மனியை (கைத்தொழில் நாடு) ஒப்பிட்டுப்பார்த்தல்.

பின்வரும் நியதிகளின் கீழ் இந்நாடுகள் இரண்டும் ஒப்பிடப்பட்டுள்ளது.

- ❒ வளங்களின் அடிப்படை
- ❒ மொத்த தேசிய உற்பத்தியின் பங்களிப்பு
- ❒ வேலைவாய்ப்பு
- ❒ ஏற்றுமதி வர்த்தகத்தின் பங்களிப்பு
- ❒ தொழில்னுட்பம்
- ❒ பிரச்சனைகளும் எதிர்காலத் தேவைகளும்

| நியதிகள் | அர்ஜன்டீனா (விவசாயம்) | ஜேர்மனி (கைத்தொழில்) |
|---|---|---|
| ❒ வளங்களும் உற்பத்தியும் |   பெற்றோலியம், இயற்கைவாயு, இரும்பு, தங்கம், ஈயம், வெள்ளீயம், தகரம், இயற்கை வாயு, கனியஎண்ணெய் ஆகிய வளங்கள் உள்ளன.<br>முழு நிலப்பரப்பில் 52% இடை வெப்பவலயப் புல்வெளி. (பம்பாஸ் புல்வெளி) பரானாபரகுவே, உருகுவே நதிப் பள்ளதாக்குக்கு அண்மையில் மண் பீட்ரூட், சீனி கிழங்கு, பார்லி, பால் ஆகியன பிரதான உற்பத்திகளாகும். |   நிலக்கரி, பெற்றோலியம், இயற்கைவாயு<br><br>*கைத்தொழில்*<br>இரும்பும், உருக்கும் நிலக்கரி, சிமேந்து, இரசாயனப் பொருட்கள், இயந்திர வாகனங்கள், மின்னியல் உபகரணங்கள், உணவு, பானவகை, கப்பல் கட்டும் தொழில், துணி வகை உற்பத்தி |
| ❒ மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வேகம் | 709.7% (2011) | 3.085% (2011) |
| ❒ ஆள்வீத மொத்த தேசிய உற்பத்தி | அ.மெ.டொ 17 400 (2011) | அ.மெ.டொ 37 900 (2011) |
| ❒ மொத்த தேசிய உற்பத்தி | 8 % (2011) | 2.7% (2011) |
| ❒ மொத்த தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு | விவசாயத் துறை 10%<br>கைத்தொழில் துறை 30.7% (2011)<br>சேவைத் துறை 59.2% (2011) | விவசாயத்துறை 0.8%<br>கைத்தொழில்துறை 28.1%<br>சேவைத்துறை 71.0% (2011) |
| ❒ வேலை வாய்ப்பு | விவசாயத் துறை 0.5%<br>கைத்தொழிலிற் துறை 23.0%<br>சேவைத் துறை 72% (2009) | விவசாயத்துறை 2.4%<br>கைத்தொழிற்துறை 29.7%<br>சேவைத் துறை 67.8% (2005) |
| ❒ ஏற்றுமதி வர்த்தகம் | விவசாய உற்பத்தி ஏற்றுமதியில் முதலிடம் வகிப்பவை சோயா உற்பத்தி, சோளம், பழவகை பிரதானமாகும். விவசாயத்திற்கு நவீன தொழினுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. சிறிதளவு மோட்டார் வண்டி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. | இயந்திர உபகரணங்கள், துணிகள் இரசாயன உற்பத்திகள், கணனி என்பன ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கின்றன. |


| | | |
|---|---|---|
| ❑ ஏற்றுமதி வர்த்தகத்தில் பங்குதாரர்கள் ஒன்றிணைப்பாளர்கள் | பிரேசில் 21.2%<br>சிலி 9.1%<br>அ.ஐ.அரசுகள் 5.4%<br>சீனா 7.0% (2010) | பிரான்ஸ் 10.1% சீனா 4.7%<br>அ.ஐ.அரசுகள் 6.7% இத்தாலி 6.3%<br>பிரித்தானியா 6.6% சுவிட்சர்லாந்து4.5%<br>நெதர்லாந்து 6.6% பெல்ஜியம் 5.2%<br>அவுஸ்திரேலியா 5.7% (2009) |
| ❑ தொழில்நுட்பம் | ♦ நவீன தொழில்நுட்பம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தல் அதிகரித்துள்ளது.<br>♦ அதனால் மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வேகம் 2011இல் 8% ஆகும். | ♦ நவீன தொழில்நுட்ப அறிவானது உயர்ந்த மட்டத்தில் உள்ளது.<br>♦ அணுசக்தி பயன்படுத்தப்படுகின்றது. ஆகாய விமான உற்பத்தி உயர்ந்த நிலையில் உள்ளது. |
| ❑ பிரச்சினைகளும் எதிர்கால தேவைகளும் | ♦ சனத்தொகை வளர்ச்சி வேகம் 2010 இல் 1.04% ஆனதால் வளங்களைப் பகிர்வதில் பாதிப்புக்கள் உண்டாகும்.<br>♦ கல்வித் தரத்தை அதிகரிப்பதனால் மனித வள அபிவிருத்தி அதிகரிக்கும் போது நாட்டின் அபிவிருத்தி அதிகரிக்க இடமுண்டு.<br>♦ கனிய மூலங்கள் மூலப்பொருளாக ஏற்றுமதி செய்யப்படுகின்றமை. | ♦ நீண்ட காலம் பயன்படுத்தியமையால் நிலக்கரி பெற்றோலியம் ஆகிய வலு வளங்களில் பற்றாக்குறை ஏற்படுகின்றது.<br>♦ அணுசக்தி உற்பத்தி தொடர்பாக முறைப்படுத்த பாரிய எதிர்பார்ப்புள்ளது.<br>♦ உலகிலே வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடொன்றாக மேலும் எழுச்சி பெறுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br>♦ நிலக்கரி, பெற்றோலியம் என்பன இறக்குமதி செய்யப்படுதல். |

**செயற்பாடு 2**

♦ கைத்தொழில் பொருளாதார முறையுள்ள நாடொன்றை இணங்காண்பதற்கு பயன்படுத்தக் கூடிய நியதிகளைச் சுருக்கமாக விளக்குக.



உரு 9.1
ஆர்ஜென்டீனாவின் சோளம் பயிரிடும் நிலம்



உரு 9.2
ஜேர்மனியின் மோட்டார் வாகனத் தொழிற்சாலை

## இந்தியா (விவசாயம்) ஜப்பான் (கைத்தொழில்) நாடுகளின் ஒப்பீடு

| அம்சங்கள் | இந்தியா | ஜப்பான் |
|---|---|---|
| | ♦ நிலக்கரி, மங்கனீஸ், மைக்கா, தைத்திரேனியம், இயற்கை வாயு, வைரம், பெற்றோலியம், சுண்ணக்கல், தோரியம், எண்ணெய், ஆகிய வளங்கள் உண்டு.<br><br>♦ துணிவகை, இரசாயன பொருட்கள், உணவுத் தயாரிப்பு, உருக்கு, போக்குவரத்து உபகரணங்கள். சீமேந்து அகழ்வுத்தொழில், கனிய எண்ணெய், இயந்திர வகைகள், மென்பொருள்பகுதி பிரதான கைத்தொழில் உற்பத்திகள் ஆகும்.<br><br>♦ நெல், கோதுமை, எண்ணெய் தயாரிக்கும் விதைகள், பருத்தி, கம்பளி, தேயிலை, கரும்பு, கிழங்கு, மாடு, செம்மறியாடு, மீன், பிரதான விவசாய உற்பத்திகளாகும். | எண்ணெய் வளங்கள் உண்டு.<br><br>♦ மோட்டார் வாகனம், இரசாயனப் பொருட்கள், கப்பல் கட்டும் தொழில், காரியாலய உபகரணங்கள், தயாரித்த உணவு, இடைநிலைப் பொருட்கள், கைத்தொழில் உற்பத்திகள், பிரதானமானது.<br><br>♦ நெல், கோதுமை, பீட், சீனி, காய்கறி, பழவகை, பன்றி, இறைச்சி, பால், உணவுகள், முட்டை, மீன், பிரதான உற்பத்தி பொருட்களாகும். |
| ❒ தலா மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வேகம். | அமெ. டொலர் 4463 (2011) | அமெ. டொலர் 4,389 (2011) |
| ❒ மொத்த தேசிய உற்பத்தி | அமெ. டொலர் 3,700 (2011) | அமெ. டொலர் 34300 (2011) |
| ❒ தலா மொத்த தேசிய உற்பத்தி | 8.3% (2010) | -0.5% (2011) |
| | விவசாயப் பகுதி 18.1%<br>கைத்தொழில் பகுதி 26.3%<br>சேவைப் பகுதி 55.6% (2011) | விவசாயப் பகுதி 1.4%<br>கைத்தொழில் பகுதி 24.0%<br>சேவைப் பகுதி 74.6% (2011) |
| | விவசாயப் பகுதி 52.0%<br>கைத்தொழில் பகுதி 14.0%<br>சேவைப் பகுதி 34.0% (2009) | விவசாயப் பகுதி 3.9%<br>கைத்தொழில் பகுதி 26.2%<br>சேவைப் பகுதி 69.8% (2010) |
| | முழுப்பெறுமதி அமெ.டொலர் பில்லியன் 298.2 (2011)<br>சீனா 8.1%<br>அமெ.ஐ.நாடு 12.6%<br><br>ஐ.அ.எ.குடி 12.87 (2011) | முழுப்பெறுமதி அமெ.டொலர் பில்லியன் 800.8% (2011)<br>சீனா 19.4%<br>அமெ.ஐ.நாடு 15.7%<br>தென் கொரியா 8.1%<br>தாய்லாந்து 4.4%: 2010<br>ஹொங்கொங் 5.5%: 2010 |
| | ♦ நவீன தொழில் நுட்ப அறிவை பெற்றுக்கொள்ள இயலுமான வரை முயற்சியை மேற்கொண்டிருத்தல்<br><br>♦ கணினி மென்பொருள் தயாரிப்பில் உலகிலே முதலிடத்தைப் பெற்றுள்ளது. | ♦ நவீன தொழில் நுட்பம் உயர்ந்த மட்டத்தில் உள்ளது<br><br>♦ ரோபோக்களின் உதவிளோடு உற்பத்தி கைத்தொழில் மேற்கொள்கின்றது. |

| | | |
|---|---|---|
| பிரச்சனைகளும் எதிர்கால தேவைகளும் | ♦ சனத்தொகை அதிகரிப்பு சனத்தொகை வளர்ச்சி வேகம் அதிகரித்து செல்லல். 2012 இல் முழுச்சனத்தொகை மில்லியன் 1205 சனத்தொகை வளர்ச்சி வேகம் 1.31% (2012)<br>♦ அதனால் அதிகரித்து செல்லும் சனத்தொகையின் தேவைகளை நிறைவேற்ற அரசுக்கு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.<br>♦ ஐந்து ஆண்டுத்திட்டம் மூலம் அந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்து வருகின்றது.<br>♦ விவசாயப்பிரிவின் வளர்ச்சிக்கு சமமாக கைத்தொழில்வளர்ச்சியும் ஏற்படுத்துவதனால் உயர்ந்த பொருளாதார நாடாக மேலோங்கி வருகிறது. | ♦ அனைத்து கைத்தொழில்பொருட்களும் மூலப் பொருள்கள் வலுச்சக்தி மூலமும் இறக்குமதி செய்யப்பட்டு தயாரிக்கப்படுகின்றன.<br>♦ ஜப்பானில் மோட்டார் வாகன சந்தைக்கு தாய்வான், கொரியா முதலான வேறு நாடுகளுடன் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் வெளிநாட்டு சந்தைகளை சிறந்த முறையில் வைத்துக்கொள்வதில் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.<br>♦ இறக்குமதி செய்யப்பட்ட வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்ய வேண்டியிருக்கின்றது. எனினும் இறக்குமதி செய்யப்படும் வளங்களிற்காக செலவிடப்படும் மூலதனம் அதிகம். அதனால் உற்பத்தி செலவு அதிகரிப்பதனால் பொருளதாரத்தில் கஷ்டங்கள் ஏற்படுகின்றது. |

ஆதாரம் : https://www.cia.gov/library/publications/ TheWorld Fact Book/ geos/bg.html 2012.03.15,
http://www.indexmundi.com/india/population_growth_rate.html

**செயற்பாடு 3**

- கைத்தொழில் பொருளாதார நாடொன்றினை இனங்காணப் பயன்படுத்தக்கூடிய நியதிகளை விளக்குக.
- தேசப்படப் புத்தகத்தின் துணையோடு பின்வரும் நாடுகளின் உள்ள தகவல்களை வரைந்து காட்டுக.

| | | |
|---|---|---|
| இந்தியாவில் | - விவசாயப் பிரதேசங்கள் | - 3 |
| ஜப்பானிய தீவுகளில் | - கைத்தொழில் பிரதேசங்கள் | - 3 |
| ஜேர்மனியில் | - கைத்தொழில் பிரதேசங்கள் | - 3 |
| ஆர்ஜன்டினாவில் | - விவசாயப் பிரதேசங்கள் | - 2 |



உரு 9.3 ஜப்பானிய மோட்டார் வாகனத் தொழிற்சாலை



உரு 9.4 இந்தியாவில் பருத்தி பயிரிடப்படும் நிலம்